RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/ irjt224s2181

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் நாட்டுப்புறத் திருவிழாக்கள்

ரா. காயத்ரி [அ, *], ர. விமல்ராஜ் [அ]

[அ] தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, ப. வேலூர், நாமக்கல்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# Folk Festivals in Sangam Literature

R. Gayathri [a, *], R. Vimalraj [a]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, P-Velur, Namakkal-638182, Tamil Nadu, India

* Corresponding Author:
gayathrikavitha8286@gmail.com

Received: 20-08-2022
Revised: 14-10-2022
Accepted: 22-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Festivals are celebrated together even though human society lives in different sects. Festivals are the culture of a society. It also helps to understand habits. Festivals start with a sense of worship and grow and live with confidence in terms of rituals. Through festivals, education, knowledge and goodwill are developed among the people. Festivals have been celebrated among the Tamils from generation to generation. Such special festivals are found in sangam literature and in later lagamas. By celebrating the festivals it is not only the happiness of the individuals but also the family. The society and people from all walks of life are happy. Though human society has lived in different sects for a variety of reasons, festivals are the root causes for the society to come together and celebrate. This is the basic purpose of celebrating the festival.

**Keywords:** Sangam Literature, Culture, Festivals, Society

## முன்னுரை

"மனித சமுதாயம் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்தாலும் அவை ஒன்றிணைந்து கொண்டாடப்படுவது திருவிழாக்கள்". விழாக்கள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும், பழக்க வழக்கத்தையும் அறிந்து கொள்ள உதவுகின்றது (Sakthivel, 2022).

சங்க காலத்தில் திருவிழாவை 'விழவு', 'சாறு' என்று கூறப்படுகின்றன.

"அழியா விழவின் அஞ்சுவரு மூதூர்"

"சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற"

சாறு என்பதற்கு விழா என்று பொருள் கூறப்படுகிறது (Balasubramaniyan, 2004; Nagarajan, 2004). திருவிழாக்கள் வழிபாட்டு உணர்வுடன் தொடங்கி சடங்குகளின் அடிப்படையில் நம்பிக்கையுடன் மக்களிடம் செல்வாக்குப் பெற்று வளர்ந்தும் வாழ்ந்தும் தொன்று தொட்டு நிலவுகின்றது. திருவிழாக்கள் மூலம் மக்களிடையே கல்வி கலையறிவு, நல்லுணர்வு ஆகியவை வளர்ச்சி அடைகின்றன.

## விழாக்களின் நோக்கம்

விழாக்கள் கொண்டாடப்படுவதன் மூலம் தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி மட்டும் இல்லாது குடும்பம். சமுதாயம் மற்றும் பலதரப்பட்ட மக்களும் மகிழ்ச்சி அடைகின்றனர். மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்தாலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து

கொண்டாடுவதற்கு திருவிழாக்களே மூலக் காரணங்களாகும். இதுவே திருவிழா கொண்டாடுவதன் அடிப்படை நோக்கமாக அமைகின்றது. மக்களுக்கு ஓர் ஆன்மீகச் சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவதற்கே திருவிழாக்கள் ஏற்படுத்தப்பட்டது. ஆலயங்கள் இறைவனை நினைவூட்டும் இடங்களாக இருப்பது போல் திருவிழாக்கள் இறைவனோடு தொடர்பு கொள்ளச் செய்யும் காலங்களாகவே அமைகின்றது என குறிப்பிடப்படுகிறது (Mahadevan, 1964).

## இலக்கியங்களில் விழாக்கள்

விழாக்கள் தமிழர்களிடையே தலைமுறை தலைமுறையாக தொன்று தொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த விழாக்கள் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்ககியங்களிலும் காணப்படுகின்றது. விழாவில் முழவு, முரசு. குழல் போன்ற இசைக் கருவிகள் முழக்கப்பட்டது. இக்கருவிகளில் முழுக்கப்பட்ட ஓசைகள் விழாக்களத்தில் இடையறாது ஒலித்துக் கொண்டிருந்தன என்பதைக் கீழ்க் கண்ட நற்றிணை பாடல் வழியாக அறியப்படுகிறது (Parimanam & Balasubramaniyam, 2004).

“பெரிதும் சான்றோர் மன்ற விசிபிணி

முழுவுக் கண் புலரா விழவுடை ஆங்கண்”

பொதுவாக விழாவிற்கு வருகை தரும் மக்கள் புத்தாடை அணிந்து அலங்கரித்துக் கொண்டு வருவது வழக்கமாக உள்ளது சங்க காலத்தில் மக்கள் தங்களை அழகுபடுத்திக் கொண்டு சென்ற நிலையினைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றது. பெண்கள் கூந்தலுக்கு மணமூட்டியும் பல அணிகளையும் அணிந்து கொண்டு அலங்காரங்களுடன் சென்ற நிலையினை குறுந்தொகைப் பாடல்கள் கூறுகின்றது (Nagarajan, 2004).

“உடுத்தும் தொடுத்தும் பூண்டும் செரீஇயும்

தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி

விழ்வொடு வருதி நீயே”

பொதுவாக, விழாக்கள் வளர்பிறையில் கொண்டாடப்படுவதே இன்றைய காலத்திலும் நாட்டுப்புற மக்களிடம் வழக்கமாக உள்ளது. விழாக்கள் வளர்பிறைக் காலத்தில் கொண்டாடப்பட்டதை நற்றிணைப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது. ஊரிஷ் விழா நிகழும் காலத்தில் தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி,

“நிலவே நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி

பால்மலி கடலின் பரந்து பட்டன்றே

ஊரே ஒலி வரும் சும்மையொடு மலிவு தொகுபு ஈண்டி

கலிகெழு மறுகின் விழுவு அயரும்மே”

பால் போல் நிலவு எரிக்கும் இரவில் தெருக்களில் பேரொலிமிக்க மக்கள் கூடி விழா காண்கின்றனர். விழாக் காலத்தில் மக்கள் தூக்கத்தையும் விட்டு விழா நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர் எனக் குறிப்பிடப்படுகிறது (Parimanam & Balasubramaniyam, 2004).

## விழாச் சாத்துதல்

கோயில் தர்மகர்த்தா முன்னிலையில் கோயில் முன்பு மக்கள் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்தில் திருவிழா நடைபெறும் முறையினையும் ஒவ்வொரு குடும்பமும் செலுத்த வேண்டிய வரியைப் பற்றியும் விவாதிக்கப்படும் ஊர்க்கூட்டம் முடிந்த பின்னர் தீபாராதனை நடைபெற்று விழாச் சாற்றுதல் தொடங்கி விட்டதாக மக்கள் கருதுகின்றனர்.

### விரதம்

கோயில்களில் திருவிழா சாத்துதல் தொடங்கிய நாள் முதல் திருவிழா முடியும் வரை கோயில் பூசாரிகள், சாமியாடிகள், ஊர் கொத்துக்காரர் நேர்த்திக்கடன்கள் செலுத்த விரும்பும் பக்தர்கள் விரதங்களை மேற்கொள்வார்கள் தீ மிதித்தல் அக்னிச்சட்டி எடுத்தல் விரதங்களை மேற்கொள்வார்கள். தீ மிதித்தல், அக்னிச்சட்டி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்களைச் செலுத்தவிருக்கும் பக்தர்கள் காலில் செருப்பு அணியமாட்டார்கள். காலை மாலை இருவேளைகளும் குளித்துக் கோவிலுக்குச் சென்று சாமிவழிபாடு நடத்திய பின்னரே உணவு உண்ண வேண்டும். தூங்கும் போது தரையில் மட்டுமே படுத்து உறங்க வேண்டும். விரதம் மேற்கொண்டு உபவாசம் இருந்து கடவுளை வழிபடும் முறையானது சங்க காலம் முதலே இருந்து வந்துள்ளது என்பதை இப்பாடல் மூலம் காணலாம்.

“நீ தையின் நீராடிய தவம் தலைப் படுவாயோ” என்ற பாடல் வரியும் (Nachinarkiniyar, 2007)

"நன்பகல் பலவுடன் கழித்த உண்டியர்” என்று திருமுருகாற்றுப்படையும் கூறுகின்றது.

## தீர்த்தக் குடம் எடுத்தல்

பொதுவாக தீர்த்தம் என்ற புனிதநீர் ஆற்றிலிருந்து எடுத்து வந்து தெய்வங்களுக்கு அபிஷேகம் செய்வதால் தெய்வங்கள் புனிதத்துவம் அடைவதாக மக்கள் நம்பிக்கைக் கொண்டு தீர்த்தம் எடுத்தல் என்ற வழக்கத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

“ஆங்கு

ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்

பூவும் புகையும் புனைசாந்தூம் கண்ணியும்

நீடுநீர் வையை நெடுமாலாடி"

எனும் பாடலில் மாதரி ஐயை வையையாற்றில் நீராடி கரையில் அமைந்துள்ள இறைவனை கூறுகின்றார். வழிபடச் சென்றாள் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார் (Venkatasamy Nattar, 2018).

### காப்புக் கட்டுதல்

தெய்வ வழிபாடானது எந்தவிதத் தீங்கும் இல்லாமல் பயபக்தியுடன் செயல்பட்டு இனிதே நடைபெறுவதற்க ஊர் மக்கள் உறுதி எடுப்பதே காப்புக் கட்டுதலாகும். மஞ்சள் கிழங்குகளை வெள்ளை நூலில் கட்டி அதை அம்மனின் முன்பாக வைத்துப் படைப்பதே காப்புக் கட்டுதல் எனப்படும். காப்பிற்கு முன்பே இல்லங்களையும், கோயிலையும் தூய்மைப்படுத்தி. வெள்ளை அடித்தல் போன்றவைகளைச் செய்து விடுவார்கள். சாமி கோயில் உலா வரும் பாதைகள் புது மணல் பரப்பிய செய்தியை,

"பூந்தொடை விழாவின் தலைநாள் அன்ன

தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்"

என அகப்பாடல் கூறுகிறது (Balasubramaniyan, 2004). இன்றும் விழாக்களில் புதுமணல் கொண்டு வந்து பரப்பி தரையைச் சரி செய்வதைக் காணமுடிகிறது.

### கும்பம் பாலித்து பூஜை செய்தல்

கரகம் என்பது புனித நீர் கொண்டுள்ள பானையைக் குறிக்கும். விழா தொடங்குவதற்கு முந்தைய இரவு கோயில் பூசாரி அல்லது ஊர் கொத்துக்காரர் ஊர் மக்களுடன் ஆற்றுக்கு சென்று புதுக்கரகப் பானையில் நீர் இரப்பி வேப்பிலை கதம்பம். மல்லிகைப்பூ தென்னம்பாலை, விபூதி சந்தனம், குங்குமம், மாலை ஆகியவற்றால் அலங்கரித்து கோயிலுக்கு எடுத்து சென்று பூஜைகள் செய்து

தீபாராதனை நடைபெறும். "ஒரு சில கிராமங்களில் உலோகத்தாலான அம்மன் முகத்தைக் காகத்தில் இணைத்து வைக்கும் வழக்கமும் இருந்து வருகிறது என்கிறார்கள்" (Gnanasekeran, 2008).

## பொங்கல் வைத்தலும் அதன் நோக்கமும்

"அம்மன் தெய்வங்களுக்குச் செவ்வாய்க் கிழமைகளிலும், ஆண் தேவதைகளுக்கு வெள்ளிக் கிழமைகளிலும் பொங்கலிடுவர். அதோடு, இத்தேவதைகளுக்கு நடக்கும் கொடை விழாக்களில் ஒவ்வொரு நாளும் பொங்கலிடுவர்."

கோயிலில் பொங்கல் வைத்த பின் பொங்கலை கோயிலின் உள்ளே எடுத்து சென்று வைப்பார்கள். கோயில் பூசாரி அனைத்துப் பொங்கல் பானைகளிலும் சிறிதளவு பொங்கல் எடுத்து ஒரு பெரிய பாத்திரத்தில் சேகரித்து வைப்பார்கள். பிறகு தேங்காய் பழம் ஆகியவற்றுடன் பொங்கலையும் தெய்வத்திற்குப் படைத்து தீபாராதனை காட்டுவார்கள். பொங்கல் வைத்த பெண்கள் தெய்வத்தை வணங்கி விட்டு தங்களது பொங்கல் பானையை எடுத்துச் செல்வார்கள்.

புது வீட்டிற்கு குடிபுகும் பொழுது பால்காய்ச்சிப் பாலை பொங்கி விடுகின்ற வழக்கம் இன்றும் காணப்படுகின்றது. பொங்கி வருவதால் ஆண்டு முழுவதும் செல்வமும், நிலத்தில் தானியங்களும், குடும்பத்தில் மகிழ்ச்சியும், பொங்கி வழியும் என்ற நம்பிக்கைகளில் காரணமாகவே பொங்கல் வைத்தல் என்னும் வழக்கம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. திருவிழாக் காலங்கள் தவிர மற்ற நாட்களிலும் குறிப்பாக, புது வீட்டிற்குக் குடிபுகும் பொழுது புதுமனைத் தம்பதிகள் இல்லற வாழ்க்கை ஆரம்பிக்கும் முன்பு குலதெய்வக் கோயில்களில் அல்லது கிராமத்து கோயில்களில் பொங்கல் வைத்து வழிபடுகின்ற வழக்கம் உள்ளது.

## மாவிளக்கு எடுத்தல்

பச்சரிசி மாவு இடித்து அதனுடன் வெள்ளம், ஏலக்காய் சேர்த்து நன்றாக உருட்டிய பிறகு உருண்டையாக எடுத்து அதன் நடுவில் குழியாக்கி அதில் எண்ணெய் ஊற்றி பஞ்சாலோ அல்லது துணியாலோ திரியிட்டு தேங்காய் வாழைப் பழம் ஆகியவற்றுடன் சேர்த்து மாவிளக்கையும் ஒரு தட்டில் வைத்து கோயிலுக்கு எடுத்து செல்வார்கள். பூசாரி ஒவ்வொரு தட்டிலும் உள்ள தேங்காய்களை உடைத்து முடித்ததும் தெய்வத்திற்கும் மாவிளக்கு தட்டிற்கும் தீபாராதனை காட்டுவார்கள். அனைவரும் தெய்வத்தை வணங்கிய பின் மாவிளக்குத் தட்டை எடுத்துச் செல்வார்கள்.

## சாமி ஊர்வலம்

தெய்வம் உலா வருதல் என்னும் நிகழ்வு தமிழகத்தின் பழங்கால முதல் இருந்து வருவதை தமிழ் இலக்கியங்கள் மூலம் காணமுடிகிறது. திருவிழாக்களின் போது. ஊர்வலம் செல்லும் தெய்வத்தின் சிலையை அலங்கரித்து ஆபரணங்கள் அணிவித்து சப்பாரத்தில் கட்டி ஊருக்குள் ஆண்கள் எடுத்துச் செல்வார்கள். ஊர்வலம் எடுத்து வரும் தெய்வங்களுக்கு தேங்காய், பழம், பன்னீர். ஊதுவத்தி சூடம், சாம்பிராணி, வெற்றிலை பாக்கு ஆகியவற்றை அளிப்பர். இதைச் "சொர்ணப்பம் சாத்துதல் என்பர்.

## பலியிடுதல்

உயிர்ப்பலி முறையே தொடக்க கால மக்கள் சமுதாயத்திடையே தெய்வத்தின் சீற்றம் போக்கக் கையாண்ட வழிபாட்டு முறை என்பதை மானிடவியலார் உணர்த்தியுள்ளனர். பலியிடுதல் தெய்வத்தின் சீற்றத்தைத் தணிக்கச் செய்யப்பட்ட வினைமுறையாக கூறுகின்றது. அமைந்துள்ளது என்பதை அகப்பாடல்

"முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூற

களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி

வளநகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து

உருவச்செந்தினை குருதியொடு தூஉய்

முருகு ஆற்றுப் படுத்த உருகெழு நடுநாள்"

மறிப்பலியொடு அதன் குருதியை திணையொடு விரவி மடை கொடுத்த நிலை சுட்டத்தக்கது. இக்கருத்துக்களை பார்க்கும் பொழுது தெய்வங்களுக்குப் பலியிடுதல் சங்க காலம் முதல் நடைபெற்று வருவதை காணமுடிகிறது (Balasubramaniyan, 2004).

## கும்பம் விடுதல்

கோவிலில் வைக்கப்பட்ட கும்ப விழா முடியும் வரை கோவிலினுள் வைக்கப்பட்டு அக்கும்பத்திற்கு பூசைகள் நடத்தப்படுகிறது. விழா முடிந்த பின்னர் பூசாரியுடன் மக்கள் அனைவரும் திரண்டு வந்து கரகம் தயாரித்த நீர் நிலையிலே கரகத்தினை மூழ்கடித்து விடுவார்கள்" அம்மன் வழிபாடு மழை வேண்டி நடத்தப்படவதனால் அம்மனுக்குரிய கரகத்தை மழையுடன் தொடர்புடைய நீர் நிலையில் உருவாக்கி அதே நீர் நிலையில் மூழ்கடித்து விடுகின்றனர்.

## மஞ்சள் நீராடுதல்

கம்பம் அல்லது கும்பம் விடுதல் நிகழ்ச்சி முடிந்த பிறகு "மஞ்சள் நீராடுதல்" என்னும் நிகழ்ச்சி அனைத்து ஊர்களிலும் நடைபெறுவதைக் காணமுடிகின்றது. இதுவே திருவிழாவின் இறுதி நிகழ்வாகும். மஞ்சள் நீரை திருமண முறையுள்ள ஆண்களும், பெண்களும் ஒருவர் மீது ஒருவர் ஊற்றி விளையாடுகின்றனர். இவ்விளையாட்டு மக்களிடையே ஒற்றுமையுணர்வையும். மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதுடன் திருமண முறையுள்ளவர்களை இளைஞர்கள் அறிந்து கொள்ளவும் உதவுகிறது.

## முடிவுரை

நாட்டுப்புற மக்களால் தெய்வங்களுக்குக் கொண்டாடப்படும் விழாக்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது. வருடம் முழுவதும் உழைக்கும் மக்களுக்கு விழாக்களே ஓய்வையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. விழாக்களின் மூலம் குடும்ப உறுப்பினர்களுடனும் சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்களுடனும் ஒன்றிணையவும் புரிந்து கொள்ளவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. திருவிழாக் காலங்களில் நடைபெறும் ஊர்க்கூட்டம். தீர்த்தம் எடுத்து வருதல், கும்பம் பாலித்தல் பொங்கல் வைத்தல் மாவிளக்கு எடுத்தல், சாமி ஊர்வலம் போன்ற பல்வேறு வழக்கங்களின் மூலம் மக்கள் ஒற்றுமையுணர்வுடன் செயல்படுவதைக் காண முடிகின்றது.

## References


Balasubramaniyan, K.V. (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Gnanasekeran, T. (2008) Manthiram, Sadangukal, Samayam, Parthipan Pathippagam, Chennai, India

Mahadevan, T. M. P. (1964) Outlines of Hinduism, Tamil Veliyetu Kalagam, Chennai, India

Nachinarkiniyar, (2007) Kaliththogai, Kalaga Veeliyidu, Chennai, India

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P)Ltd, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Sakthivel, S. (2022) Nattupura Iyal Aivu, Manivasagar Pathipagam, Chennai, India

Venkatasamy Nattar, Na.Mu., (2018), Silapathikaram Moolamum Uraiyum, 1st Edition, Gowra Agency, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License